தலைவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சிக் கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவை நிகழ்ச்சிகளை தினமும் ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல உதவிய அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்ற உதவிய பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2007 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-17 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

105. யாதொரு வணிகரால் மேற்கொள்ளப்படும் பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட கண்ணாடிப் புட்டிகள், கழிவுத்தாள் மற்றும் கழிவு காகித அட்டை ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் *28-12-2006* ஆம் நாளிட்ட *176* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

106. யாதொரு வணிகர் அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உறுதிமொழியினைச் சான்றளிப்பதின் பேரில் சென்னை திருவாளர்கள் புளூ கிராஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்திற்கு விற்பனை செய்த கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை ஊர்திகளைப் பராமரிப்பதற்குரிய உதிரிப் பாகங்கள், கால்நடைத் தீவனம், அறுவை சிகிச்சையில் தையலிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக கால்நடை மருத்துவமனையில் வைத்திருக்கத் தேவைப்படும் அனைத்துப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைக்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறையின் *30-12-2006* ஆம் நாளிட்ட *194* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]